# இலங்கை திறந்த பல்கலைக் கழகம்
## தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்
## இறுதிப் பரீட்சை – 2008/2009
## MCC 1201 - தொழிலுரிமைத்துவம்
## காலம்: இரண்டு (2) மணித்தியாலங்கள்

---

திகதி : 13.12.2008 நேரம்: 10.00 மு.ப – 12.00 மதியம்

---

**எவையேனும் நான்கு (4) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக. எல்லா விடைகளும் சம புள்ளிகளைக் கொண்டுள்ளன.**

01. “பிறப்பு வழி தொழிலுரிமையாளர்கள்” மட்டுமே தமது வியாபாரத்தினை திருப்தியாக நடாத்துவதுடன், வெற்றியும் அடைகின்றார்கள் என நம்பப்படுகின்றது. சித்தாலேப வெதமகத்தையாவினை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறமுடியும். மேற்கூறிய கூற்றினையிட்டு, தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறியினை பயலும் மாணவராகிய உமது கருத்தினைத் தருக.

02. இரத்தினபுரி நகரிலிருந்து 27 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமமொன்றில் நீர் சீவிப்பதாகக் கருதவும். இக் கிராமத்திலுள்ள 200 குடும்பங்களில், 100 பேர் சிறிய வேளாண்மை காணிகளின் உரிமையாளர்களாவர். இவ் விவசாயக் குடும்பங்கள் மரக்கறியினையும், பழவகைகளையும் பயிரிடுகின்றன. சுமார் 500 மாணவர்கள் இக் கிராமப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். சுமார் 700 காரியாலய ஊழியர்களும், தொழிலாளர்களும், 30 மாணவர்களும் அவர்களது கிராமத்திலிருந்து இரத்தனபுரி நகருக்கு நாளாந்தம் பயணம் செய்கின்றனர். இக் கிராமத்திற்கும் நகருக்குமிடையே ஒரே பஸ் வண்டி மாத்திரமே 3 முறைகள் - காலை, மதியம், பிற்பகல் வேளைகளில் - பிரயாணம் செய்கின்றது. இரு சிறிய சில்லறைக் கடைகள், ஒரு புடவைக் கடை, தேனீர் கடையொன்றும், சலூனும், மரக்கறிகள், பழங்கள் வியாபாரியின் கடையொன்றும் இக் கிராமச் சந்தியில் வியாபாரத்தில் ஈடுபடுகின்றன.

    வெளி நாடொன்றில் ஏழு வருடங்களாக தொழில் புரிந்து கணிசமானளவு பணம் சம்பாதித்த ஜயதாச, இக் கிராமத்தில் வியாபாரமொன்றினை ஆரம்பிக்க மிகவும் ஆர்வமாகவுள்ளார். இக் கிராமத்தில் அவருக்காக ஒரு தகுந்த வியாபாரத்தினை இனம் காண ஆலோசனை வழங்கக்கூடியவராகவுள்ள உம்மை அவர் காணவந்துள்ளார்.

    1. நீர் ஜயதாசவிற்கு முன்மொழியக் கூடிய வியாபாரத்தின் பெயரினைக் குறிப்பிடுக.

    2. உமது மும்மொழிவினை நியாயப்படுத்துக. ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான காரணிகளிருப்பின் அவைகளைக் குறிப்பிடுக.

03 தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தன் பின்னர், நீர் இன்று உமது பகுதியிலுள்ள பிரதேச செயலாளர் காரியாலயத்தில் தொழிலுரிமைத்துவ அபிவிருத்தி உதவி அதிகாரியாக பதவி ஏற்றுக் கொள்வதாகக் கருதவும். உமது கடமைகளையும், பொறுப்புகளையும் விளக்கியபின்னர், பிரதேச செயலாளர் உம்மை கூட்ட மண்டபத்திற்கு அழைத்துச் செல்கின்றார்.

அக் கூட்ட மண்டபத்தில் ஏழு நபர்கள் அமர்ந்துள்ளனர். பிரதேச செயலாளர், அவர்கள் தமது நகரங்களில் சிறிய வியாபார முயற்சிகளை ஆரம்பிற்க விரும்புவதாகக் கூறுகின்றார். மேலும், அவர்கள் ஒரு வியாபாரத்தினை ஆரம்பிப்பது பற்றி விளக்கமொன்றினைக் கொண்டிருக்கவில்லையென்றும், அவர்களின் ஆர்வம் குறையும் முன்னர், கூடிய கெதியில் வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கு நீர் உதவி புரிய வேணடுமெனவும் கூறுகின்றார். நீர் நடைமுறையியுள்ள உதாரணங்களைக் கொண்டு ஒரு வியாபாரத்துக்குரிய குறிக்கோள் (**vision**), நோக்கம் (**mission**), இலக்குகள் (**objectives**) ஆகியவற்றினை விளக்குமாறு எதிர்பார்க்கப்படுகின்றீர். பிரதேச செயலாளரின் வேண்டுகோளை விருப்பமுடன் ஏற்றுக் கொண்ட நீர், அங்கிருந்தவர்களுடன் சில நிமிடங்கள் கலந்துரையாடியபின்னர், அவர்கள் எல்லோரும் க.பொ.த.ப (சா/தரம்) பரீட்சையினை திருப்தியாக பூர்த்தி செய்துள்ளார்களென அறிந்து கொண்டீர். உமது விடையில் எவ்வாறு நீர் பிரதேச செயலாளரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்றுவீரென விளக்குக.

04. அதிகமான சிறிய வியாபாரங்கள் அவைகள் ஆரம்பித்த அதே வேகத்திலேயே ஸ்தம்பித்துவிடுகின்றன என அநேகமாக அவதானிக்கப்படுகின்றது. அவைகளில் சில வளர்ச்சியோ அல்லது தாழ்வோ அடையாது தேக்கமடைகின்றன. இவ்வாறான தேக்க நிலையினை உருவாக்கும் நான்கு பெரும் காரணங்களைத் தருக. நீர் இனம் கண்ட நான்கு காரணங்களை சரியென நிருபிக்கும் பொருட்டு, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேக்க நிலையிலுள்ள 25 வியாபாரங்களின் உரிமையாளர்/முகாமையாளரிடம் நடாத்தப்படும் பேட்டியின் போது, கேட்க விரும்பும் 10 வினாக்ககளைக் குறிப்பிடுக.

05. கீழ் வருவனற்றிக்கு சிறு குறிப்பெழுதுக.

1. தொழிலுரிமையாளரின் தரங்கள் (**qualities**)
2. சிறிய வியாபாரங்களின் அம்சங்கள்
3. ஒரு சிறிய வியாபாரமாகவிருப்பதன் பிரதிகூலங்கள்

*(பதிப்புரிமையுடையது)*